# யூன் – 27 – புதன்

**புனித அலெக்சாந்திரியா சிறில்**

**ஆண்டவரே! உம் விதிமுறைகள் காட்டும் வழியை எனக்குக் கற்றுத்தாரும்: திபா. 119:33**

## முதல் வாசகம் : 2 அரசர் 22 : 8 – 13, 23 : 1 – 3

ஆக்காலத்தில் தலைமைக் குரு இல்க்கியா எழுத்தன் சாப்பானை நோக்கி, ”ஆண்டவரின் இல்லத்தில் ஒரு சட்டநூலைக் கண்டெடுத்தேன்” என்றுசொல்லி, அந்நூலைச் சாப்பானிடம் கொடுக்க, அவனும் அதைப்படித்தான்.பின் எழுத்தன் சாப்பான் அரசரிடம் வந்து பதில்மொழியாக, ”அரசே! உம் அடியார்கள் கோவிலில் கிடைத்த பணத்தைச் சேகரித்து, ஆண்டவரின் இல்லத்தில் வேலை செய்வோரின் மேற்பார்வையாளரிடம் கொடுத்து விட்டனர்” என்று சொன்னான்.மேலும் அவன் அரசரிடம், ”குரு இல்க்கியா என்னிடம் ஒரு நூலைக் கொடுத்துள்ளார்” என்று கூறி,அரசர் முன்னிலையில் அதைப் படித்துக்காட்டினான்.அரசர் சட்டநூலின் வார்த்தைகளைக் கேட்டதும் தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்.பின் குரு இல்க்கியாவையும் சாப்பானின் மகன் அகிக்காமையும், மீக்காயாவின் மகன் அக்போரையும், எழுத்தன் சாப்பானையும் அரச அலுவலன் அசாயாவையும் நோக்கி, ”அரசர் இட்டகட்டளை இதுவே. நீங்கள் போய் என்னைக் குறித்தும், மக்களைக் குறித்தும், யூதா முழுவதைக் குறித்தும் கண்டெடுக்கப்பட்ட இந்நூலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று ஆண்டவரின் திருவுளத்தைத் தெரிந்து வாருங்கள். ஏனெனில் இந்நூலில் நமக்காக எழுதப்பட்டுள்ளவற்றிற்கு நம் மூதாதையர்கள் செவிகொடுக்கவும் இல்லை. அவற்றின்படி நடக்கவும் இல்லை. எனவே ஆண்டவரின் சினம் நமக்கெதிராகக் கொழுந்து விட்டு எரிகிறது” என்றார்.அரசரது அழைப்புக்கிணங்கி யூதாவிலும் எருசலேமிலும் இருந்த பெரியோர்கள் யாவரும் அவரிடம் வந்து குழுமினர்.அப்பொழுது அரசரும், யூதா நாட்டினர் அனைவரும், எருசலேம் குடிகள் அனைவரும், குருக்களும், இறைவாக்கினரும், சிறியோர் முதல் பெரியோர்வரை மக்கள் அனைவரும் ஆண்டவரின் இல்லத்திற்கு வந்தனர். அரசரோ ஆண்டவரின் இல்லத்தில் கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை நூலில் எழுதப்பட்டிருந்த யாவற்றையும் அவர்கள் காதில் விழுமாறு வாசித்தார்.அரசர் தூணருகில் நின்று கொண்டு ஆண்டவரைப் பின்பற்றி நடப்பதாகவும், அவருடைய விதிமுறைகளையும், ஒழுங்குமறைகளையும், நியமங்களையும் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் கடைப்பிடிப்பதாகவும் அந்நூலில் எழுதப்பட்டிருந்த உடன்படிக்கையின் சொற்களை நிறைவேற்றுவதாகவும் ஆண்டவர் திருமுன் உடன்படிக்கை செய்துகொண்டார். மக்களும் அவ்வுடன்படிக்கைக்கு உடன்பட்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் விதிமுறைகளைக் காட்டும் வழியைக் கற்றுத்தாரும்.

## நற்செய்தி : மத்தேயு 7 : 15 - 20

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: போலி இறைவாக்கினரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடம் வருகின்றனர். ஆனால், உள்ளேயோ அவர்கள் கொள்ளையிட்டுத் தின்னும் ஓநாய்கள். அவர்களின் செயல்களைக் கொண்டே அவர்கள் யாரென்று அறிந்துகொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ, முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையோ பறிக்க முடியுமா?. நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். கெட்ட மரம் நச்சுக் கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் நச்சுக் கனிகளைக் கொடுக்க இயலாது. கெட்ட மரமும் நல்ல கனிகளைக் கொடுக்க இயலாது. நல்ல கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு நெருப்பில் எறியப்படும். இவ்வாறு போலி இறைவாக்கினர் யாரென அவர்களுடைய செயல்களைக் கொண்டே இனங்கண்டு கொள்வீர்கள்“ என்றார்.

**தியானம் :** நல்ல மரமானது எவ்வாறு நல்லகனிகளைக் கொடுத்து சுவையில் இனிப்பின் தன்மையை வெளிப்படுத்துகின்றதோ, அதேபோன்று நாங்களும் மனமாற்றம் பெற்றவர்களாக தூய உள்ளத்துடன் வாழ்ந்து பலன் கொடுக்கும் பிள்ளைகளாக வாழ இன்றைய வாசகங்கள் அழைத்து நிற்கின்றது. இன்று எம்மை நாங்களே நல்லமரமா? அல்லது கெட்டமரமா? ஏன் எங்களைக் கேட்டுப் பார்ப்போமேயானால், கெட்ட மரமாகவே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதற்கு மறுப்பேதுமில்லை. நல்ல நிலத்தில் விதை விழுந்தால் நல்ல பலனைத்தான் கொடுக்கும், அதைவிட வெவ்வேறு நிலங்களில் விழுமாயின் பலனற்றுத்தான் காணப்படும். ஆம் இறைவன் நல்லவிதைகளாக இறைவார்த்தையைக் கொடுத்து அதன்படி வாழ்ந்து நல்லபலனளிக்கும் படியாக எம்மைத் தெரிந்தெடுத்திருக்கின்றார். ஆனால் நாங்கள் இறைவார்த்தையை உணர்ந்துவாழாமல் மனம் போன போக்கில் வாழ்க்கை வாழ்ந்து நல்ல பலனளிக்கத் தவறிவிடுகிறோம். இருப்பினும் பல சந்தர்ப்பங்களைக் கொடுப்பார் இல்லாவிடின் அடியோடு யாவற்றையும் எடுத்துவிடுவார். “நல்ல கனிகொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்” (மத்.7:9.) எனவே நாங்கள் உலக காரியங்களில் நின்று விலகியவர்களாக எமக்குக் கொடுத்த தாலந்துகளைப் பயன்படுத்தி நற்பயன் கொடுக்க எவ்வாறான சூழ்நிலையிலும் நாங்கள் தினமும் இறைவார்த்தையை வாசிப்போம், அதன்படி வாழ்வோம், நல்ல கனிகொடுக்கும் மரங்களாக மாற்றம் அடைந்து, புதுவாழ்வு வாழ்வோம்.